"அறிவு ஒளிர சால்பு சிறக்க"

# யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்

# பரிசளிப்பு விழா

## 2009 - 2010

(பழைய மாணவர் சங்க அநுசரணையுடன்)

90th Year

## 2011.07.15

தொலைபேசி இல. : 021 226 3017, தொலைநகல் :021 226 4141, மின்னஞ்சல் : nelliadymmv@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசளிப்பு விழா
# 2009,2010

காலம்
2011.07.15, வெள்ளிக்கிழமை – பி.ப. 2.00 மணி

தலைவர்

**திரு செ.சேதுராஜா**
(அதிபர்)

பிரதம விருந்தினர்

**கலாநிதி சி.ஸ்ரீசற்குணராஜா**
(தலைவர், கணித புள்ளிவிபரவியல் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

பரிசில் வழங்குபவர்
**திருமதி சிவராணி ஸ்ரீசற்குணராஜா**
(தலைவர், மொழியியற்றுறை - ஆங்கிலம் ,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

**நிகழ்ச்சிகள் :**

1. விருந்தினர் அழைப்பு
2. கொடிகள் ஏற்றுதல்
   (தேசியக் கொடி, பாடசாலைக் கொடி)
3. மங்கல விளக்கேற்றல்
4. தமிழ்த்தாய் வாழ்த்து
5. வரவேற்பு நடனம் - குழு
6. ஆசியுரைகள் :
   சிவஸ்ரீ சோமஸ்கந்த தண்டபாணிக தேசிகர்
   - குருபீடாதிபதி, அகில உலக சைவக்குருமார் சம்மேளனம்

   அருட்பணி எமில்போல்
   பங்குத்தந்தை, கரவெட்டி.
7. வரவேற்புரை
   திரு.க.கிருஷ்ணகுமார்
   (பிரதி அதிபர் - நிர்வாகம்)
8. வாழ்த்துரைகள் :
   திரு.இ.ஐயாத்துரை
   (தலைவர், பழைய மாணவர் சங்கம்)
   திரு.மு.சுந்தரலிங்கம்
   (முன்னாள் செயலாளர்,பாடசாலை அபிவிருத்திச் சங்கம்)
   திரு.வ.செல்வராஜா
   (வலயக் கல்விப் பணிப்பாளர், வடமராட்சி)
9. தலைமையுரை / அதிபர் அறிக்கை
   திரு.செ.சேதுராஜா (அதிபர்)
10. பரிசில் வழங்கல்
    திருமதி சிவராணி ஸ்ரீசற்குணராஜா
11. பிரதம விருந்தினர் உரை
    கலாநிதி சி.ஸ்ரீசற்குணராஜா
12. கலை நிகழ்வுகள் :
    குழு நடனம்
    பக்திப் பாடல்
    தனி நடிப்பு - Solo Acting -
    செல்வன் கி.சாயிரூபன்
13. சிரேஷ்ட மாணவி உரை
    செல்வி நே.ஆதித்தியா (ஆங்கிலம்)
14. நன்றியுரை
    திரு.அ.அரியரத்தினம் (பிரதி அதிபர்)
15. கல்லூரிக் கீதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகுடவாசகம்

"அறிவு ஒளிர சால்பு சிறக்க"

## கல்லூரியின் நோக்கு
## [Vision]

"அறிவும் ஆக்கமும் ஆளுமைத்திறனும் மானிட மாண்பும் மிளிரும் இருபத்தோராம் நூற்றாண்டுக்கான சமூகத்தை உருவாக்கும் உயர் கல்லூரியாக மலர்தல்"

## கல்லூரியின் பணிக்கூற்று
## [Mission Statement]

" சமகால எதிர்காலக் கல்வித் தேவைகளை தேசிய மற்றும் சர்வதேசரீதியில் நிறைவு செய்யும் வகையில், வினைத்திறன்மிக்க கள, வள, வசதிகளை ஏற்படுத்தி ஒரு தலைசிறந்த கல்லூரியாக, உயர்ந்து வடமராட்சி மற்றும் ஏந்து பிரதேச மக்களது மகிழ்ச்சிகரமான வாழ்வுக்கான செயற்பாடுகளை விளைதிறனுடன் முன்னெடுத்தல் "

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்
## பரிசளிப்பு விழா - 2009, 2010
## அதிபர் அறிக்கை

வணக்கத்துக்குரிய மதகுருமார்களே! பேரன்புக்கும் பெரு மதிப்புக்குமுரிய கலாநிதி சிவக்கொழுந்த ஸ்ரீசற்குணராஜா அவர்களே! அவர்தம் பாரியார் திருமதி சிவராணி ஸ்ரீசற்குணராஜா அவர்களே! வலயக் கல்விப் பவணிப்பாளர் அவர்களே! கல்விப்புலம்சார் ஏனைய அலுவலகளே! பெற்றோர்களே! ஆசிரியர்களே! மாணவர்களே! பழைய மாணவர் சங்கத்தினரே! பாடசாலை அபிவிருந்திச் சங்க மற்றும் பாடசாலை அபிவிருத்திக்குழு உறுப்பினர்களே! நலன் விரும்பிகளே! அதிபர்களே! பெரியோர்களே! உங்களனைவருக்கும் இனிய வணக்கங்கள்.

பாடசாலைகளின் நிகழ்வுகளிலே மிகவும் பெறுமதி மிக்கதும் அர்த்தபுஷ்டியுள்ளதுமான நிகழ்வு, மாணவர் மதிப்பீடுகளையும் அதனால் பெற்றுக்கொண்ட அடைவுகளையும் அடிப்படையாகக் கொண்டு வருடத்தில் ஒரு முறை நடத்தப்படுகின்ற பரிசளிப்புக்களே எனின் மிகையாகாது. இக்கல்லூரியின் சிறப்புமிக்க இன்றைய நிகழ்விலே முதன்மை விருந்தினராகக் கலந்து சிறப்பித்துக்கொண்டிருப்பவரும் கல்விப் புலத்திலே சிறப்பாகக் கணிதத் துறையிலே தனக்கெனவோர் தடம்பதித்து பல்கலைக் கழகத்திலும் அதனோடிணைந்த பல்வேறு சிறப்புமிகு துறைகளிலும் கல்விப்பணியாற்றிக் கொண்டிருக்கின்ற பேராசான் கலாநிதி சிவக்கொழுந்து ஸ்ரீசற்குணராஜா அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மொழியியற் றுறையின் தலைவராக நற்பணியாற்றிக் கொண்டிருக்கும் அவரன்தம் அருமைத் துணைவியார் திருமதி சிவராணி ஸ்ரீசற்குணராஜா சகிதம் சமுகமளித்திருப்பது எமக்குப் பெருமையையும் உவகையையும் தருகின்றது.

கல்விப் பாரம்பரியமிக்க வடமராட்சிப் பிரதேசத்திலே கல்விமான்களின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் குறைவேயில்லை. குறிப்பாக கணிதத்துறைசார் விற்பன்னர்களின் உருவாக்கத்தில் இப்பிரதேசம் உலகப்புகழ் மிக்கதாகும். அவ்வழியில் இப்பிரதேசத்திலிருந்து முகிழ்த்தெழுந்த கலாநிதி ஸ்ரீசற்குணராஜா அவர்கள் நல்ல கல்விப் பாரம்பரியமுள்ள குடும்பத்தில் தோன்றி கணிதத் துறையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 1983இல் முதல் வகுப்பில் சித்தியடைந்து அதே வருடத்தில் கணித மற்றும் புள்ளிவிபரவியல் துறையின் விரிவுரை யாளராகப் பதவியேற்றார். தொடர்ந்து விரைவாகப் பல பட்டமேற்படிப்புக்களை நிறைவுசெய்து மிக இளம் வயதிலே கணிதத்துறையில் கலாநிதிப் பட்டத்தினைப் பெற்றுக்கொண்ட எமது முதன்மை விருந்தினர்கள் அவர்கள் தற்போது யாழ்பல்கலைக்கழகத்தின் கணித மற்றும் புள்ளிவிபரவியல் துறையின் தலைவராகவும் யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கத்தின் தலைவராகவும் கனதிமிக்க பணியாற்றி வருகின்றார். இவர் தனது முதற் பட்டப் படிப்பில் பெற்றுக்கொண்ட கணித பாடத்தில் பெற்றுக்கொண்ட திறமைச் சித்திக்காக 1983இல் சேர் அருணாசலம் மகாதேவா நினைவுப் பரிசினைப் பெற்றுக்கொண்டார். ஐக்கிய ராச்சியத்தின் "Overseas Research Studentship" விருதினைத் திறமையடிப்படையில் 1985 இல் பெற்றுக் கொண்டதோடு அவுஸ்திரேலியாவிலுள்ள உந-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சழைவ - றுயவவ பல்கலைக் கழகத்தின் பட்டப்பின் புலமைப் பரிசிலினை 1985 - 1988 வரைபெற்று தனது கலாநிதிப் பட்டத்தினை (PhD) நிறைவு செய்தார். அத்துடன் Comonwelth புலமைப்பரிசிலினையும் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் இளம் கணிதவியலாளருக்கான சர்வதேச விருதினையும் பெற்றுக்கொண்ட இவர் விளையாட்டுத் துறையிலும் தடம் பதித்தவராவார். 1980, 1981இல் யாழ் பல்லைக் கழகத்தில் உதைபந்தாட்டத் திறமைக்கான விருதினையும் பல்கலைக்கழக விளையாட்டுச் சம்மேளத்தினால் வழங்கப்பட்ட உதைபந்தாட்டச் சம்பியன் பதக்கத்தையும் பெற்ற இவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தொடர்ச்சியாக 25 ஆண்டுகள் சிறப்பாகக் கல்விப் பணியாற்றியமைக்கான கௌரவத்தினையும் பெற்றுக்கொண்டார். இவரது இளமைக் காலத்தில் பல ஆக்கங்களையும் கட்டுரைகளையும் ஆய்வுப் பத்திரங்களையும் வெளியிட்டதுடன் பல்வேறு சர்வதேச மற்றும் தேசிய மாநாடுகளில் பங்குபற்றி தனது திறமையையும் புலமைமையையும் வெளிப்படுத்தி வருகின்றார். கல்வியிலும் சமூக சேவையிலும் ஆன்மீகத்திலும் மிகுந்த ஆர்வங்கொண்ட இவரும் இவரைப் போன்றே கல்வியையே கருத்தனமாகக் கொண்ட இவரது துணைவியாரும் எமது மாணவர்களை இந்நந்நாளில் வாழ்த்துவதனையும் கல்விக்கான ஆலோசனைகளை வழங்குவதையும் எமது கல்விச் சமூகம் பெரும்பேறாகவும் பெருமையாகவும் கருதி மதிப்பளிக்கின்றது.

கல்வியின் இலக்குகள் அடிப்படையில் மனித விழுமியத்தினையும் நாகரிக மேம்பாட்டினையும் நிலையாகக் கொண்டுள்ள போதிலும் காலவோட்டத்தில் மகிழ்ச்சிகரமான மனித வாழ்க்கை தேவைகளுக்கான கோரிக்கைகளால் காலத்திற்கமைவாகத் தினப்படுத்தி புதுப்பிக்கப்படுகின்றன. இவ்வகையில் இன்றைய் தசாப்தத்தின் கல்விச்சுலோகமான "தரமான கல்வியூடாக தரமான சமூகம்" என்னும் இலக்கினை எய்தும் படியான கல்வி முயற்சிகள் முனைப்புடன் முன்னெடுக்கப்படுகின்றன. பொதுக்கல்விக் களமான பாடசாலைகளின் கல்விசார் கொள்கைளும் செயற்பாடுகளும் இவ்விரண்டு நோக்கிலேயே முடுக்கிவிடப்பட்டுள்ளன. பாடசாலைகள் யாவும் தத்தமது இலக்கு, நோக்கு, சக்தி,முகாமைத்துவத்தெளிவு என்பவற்றிற் கமைவாக இதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ள நிலையில் யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் இதற்கான பயணத்தில் பல தடைகளையும்தாண்டி இலக்குகளை இன்று அண்மித்திருக்கின்றது.

சாம்பல் மேட்டிலிருந்து உயிர்த்தெழும் பீனிக்ஸ் பறவை போன்று வரலாற்றில் இடம்பிடித்த பாரிய இழப்புக்களிலிருந்து மீண்டெழுந்து காலத்திற்கேற்ற தரரீதியில் மேம்பட்டுவரும் ஒரு கல்லூரியாக மிளிர்கின்றது. யாழ்மாவட்டத்தில் உள்நாட்டுப் போரினால் தனது பௌதிகவளங்களை பெருமளவில் இழந்த முதல் கல்லூரியான இப்பாடசாலை கடினமான பல முயற்சிகளினூடாக இன்று பொலிவுபெற்றுத் தலைநிமிர்ந்துள்ளது.

இலவசக்கல்வியின் பிதாமகன் கலாநிதி. C.W.W.கன்னங்கரா அவர்களது சமூகநீதிக்கல்விச் சிந்தனையின் வழி இலங்கை முழுவதிலுமாக அக்காலத்திலிருந்த தேர்தல் தொகுதிகளுக்கு ஒவ்வொன்றாக 54 மத்திய கல்லூரிகளை சகல வள வசதிகளுடனும் உருவாக்கப்பட்டவற்றில் யாழ்மாவட்டத்தில் அமைக்கப்பட்ட 4 மத்திய மகா வித்தியாலங்களில் வடமராட்சிக்கென ஒதுக்கப்பட்ட ஒரேயொரு மத்தியமகா வித்தியாலயம் இதுவாகும். மறைந்த சமவுடைமைவாதியும் நாடாளுமன்ற உறுப்பினருமான பொன். கந்தையா அவர்களது தீர்க்கதரிசனம்மிக்க தீவிர அக்கறையால் வளம்பெற்று வளர்ந்த இக்கல்லூரியானது வடமராட்சி மக்களது கல்விச்சொத்தாக மேலெழுந்தது. நாடாளவிய ரீதியில் 5ம்தரப்புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெறும் மாணவர்கள் இருபாலாரும் இக்கல்லூரியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுமதிபெற்று இலவசமாக விடுதிகளில் தங்கிப்படித்த தங்கமான வரலாறு கொண்டது இக்கல்லூரி. இக்கல்லூரியின் பழையமாணவர்கள் நாடாளவியரீதியில் வசிப்பிடங்களைக் கொண்டவர்கள், இன்று தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் தொழிலிலும் கல்வியிலும் வாழ்விலும் சிறந்து விளங்குகின்றனர். அண்மைய 1990களில் இக்கல்லூரியின் தோற்ற இலக்கினை மறந்து குறுகிய நோக்கில் ஆண்/பெண் என இரு பாடசாலைகளாகப் பிரித்தமையானது ஏற்படுத்திய நன்மைகளைவிடத் தீமைகளையே அதிகமாக்கியது. வலுவான ஒரு மாணவர் தொகை நலிவாயிற்று. யுத்த அனர்த்தத்தினால் பௌதிகவளங்கள் பாதிக்கப்படலாயின. மாணவர் எண்ணிக்கையும் குறைவடைந்தது. இந்நிலையில் பொறுப்பேற்ற அதிபர்கள் மிக்க சிரமங்களின் மத்தியில் ஒரு தரமான பாடசாலையாக மீண்டும் கொண்டுவருவதற்கு முயன்றனர். கல்வி, விளையாட்டு ஆகிய இருதுறைகளிலும் மீண்டும் கல்லூரி தன்னம்பிக்கையுடன் மீண்டெழத் தொடங்கியது. இதன்பின்னரான இன்றைய கல்லூரி நிர்வாகம் நவீன கல்விச்சீர்திருத்த இலக்குகளோடு நிலைத்த அபிவிருத்திக்கான செயற்பாடுகளை வெற்றிகரமாக முன்னெடுத்து தரரீதியான பல அடைவுகளை ஈட்டி தேசியரீதியில் தரம்மிக்க ஓர்கல்லூரி என்னும் இலக்கினை நோக்கி வெற்றிகரமாகப் பயணிக்கின்றது. நவீன முகாமைத்துவ எண்ணக்கருக்களின் அடிப்படையில் பாடசாலைச்சமூகத்தினரான பெற்றோர், பழையமாணவர்கள் அனைவரையும் ஆரோக்கியமான விதத்தில் உள்வாங்கி அபிவிருத்திப் பணிகளில் ஈடுபடுத்தி கடினமான பல இலக்குகளைக்கூட எட்டிப்பிடித்துள்ளது.

பாடவிதான மற்றும் இணைப் பாடவிதானச் செயற்பாடுகளில் இக்கல்லூரியானது நிலைத்த சமநிலை அபிவிருத்தியினை அடைந்து வருகின்றது. குறிப்பாகக் கணிதபாட அடைவு மட்டம் வெகு வேகமாய் உயர்ந்து 75வீதத்தினை அடைந்துள்ளதுடன் ஏனைய பாடங்களின் அடைவுமட்டங்கள் இரு மொழி மூலங்களிலும் முன்னேற்றம் கண்டு வருகின்றன. கடந்த க.பொ.த.(சா/த) பரீட்சைக்கு தோற்றிய மாணவரது அடைவு மட்டத்தை உயர்த்துவதற்காக கணிதம், தமிழ், விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் விசேட வகுப்புகள் ஊடாக கற்பிக்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டன. இதன் விளைவாக மாணவர்களது அடைவுமட்டங்கள் உயர்ச்சி பெற்றன. எமது கணிதபாட ஆசிரியர் குழாத்தினர் அர்ப்பணிப்புடன் இரவுநேர வகுப்புக்களில் கற்பித்து மாணவரது பெறுபேறுகள் உயர உறுதுணையாக இருந்தனர். மேலும் தற்போது அடைவுமட்டம் குறைந்த மாணவர்களுக்கு விசேட மாலைநேர வகுப்புக்கள் அதிபரின் வழிகாட்டலின் கீழ் நடைபெற்று வருகிறன.

எமது கல்லூரியில் மாணவர்களது நலனோம்பு செயற்பாடுகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. பாடசாலை வேளையில் உடல்நலக்குறைவுக்கு உள்ளாகும் மாணவர்களுக்கு முதலுதவிச் சிகிச்சையளிப்பதற்கு மருத்துவ அறை வசதியும் உருவாக்கப்பட்டுள்ளது. மேலும் சுகயீனமுறும் மாணவரை வைத்தியசாலைக்கு அல்லது வீட்டிற்கு அனுப்பி வைப்பதற்கான முச்சக்கரவண்டி வசதியும் உள்ளது. இதற்காக எமது கல்லூரிக்கு முச்சக்கரவண்டியொன்று செல்லமுத்தூஸ் உரிமையாளர் திரு. சண்முகசுந்தரம் அவர்களால் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

எமது கல்லூரியானது கல்விசார் போட்டிகள் பலவற்றில் சாதனைகளையும் புரிந்துவருகின்றது. இவ்வருடம் பலமட்டங்களில் நடைபெற்ற கணித ஒலிம்பியாட் போட்டியில் எமது மாணவர்கள் எட்டு பேர் தேசிய மட்டப்போட்டிகளுக்கு தெரிவு செய்யப்பட்டதுடன் தரம் 10 ஐச் சேர்ந்த செல்வன். சிவசுப்பிரமணியம் தனுசன் தேசிய மட்ட சிரேஷ்ட கணித ஒலிம்பியாட் போட்டியிலே வெற்றி பெற்று இந்தோனேசியாவின் பாலி நகரில் 2011 யூலை 18ம் திகதி முதல் நடைபெறவுள்ள சர்வதேச கணித



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒலிம்பியாட் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் இலங்கையிலிருந்து தெரிவு செய்யப்பட்ட எட்டு மாணவர் அடங்கிய குழுவில் முதலாவது மாணவனாக தெரிவு செய்யப்பட்டுச் சாதனை படைத்துள்ளார்.

2010ம் ஆண்டு உங்களுக்குத் தெரியுமா? (Do you know?) மாகாணமட்டப் போட்டியில் வெற்றி பெற்ற ஆறு மாணவர்களில் செல்வன் இராமநாதன் ஸ்ரீதிவாகரன், செல்வி மாதங்கி கிருஸ்ணதாசன் ஆகிய எமது கல்லூரி மாணவர்கள் இருவர் தேசியமட்டப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அகில இலங்கைத் தமிழ்த்தினப் போட்டியிலே எமது கல்லூரி மாணவன் செல்வன். அம்பிகாநிதி கோகுலன் 2009ம் ஆண்டு கவிதையாக்கத்திலும், 2010ம் ஆண்டு குறுநாடக ஆக்கத்திலும் தேசியமட்டத்தில் முதலாமிடத்தினைப் பெற்று சாதனை புரிந்துள்ளார். அத்தோடு 2009 ஆம் ஆண்டின் அகிலஇலங்கை ஆங்கிலதின எழுத்தாக்கத்திறன் போட்டியில் எமது மாணவி செல்வி. துஷிதா மனோகரன் தேசிய ரீதியில் முதலாமிடம் பெற்று சாதனை படைத்தார். 2011ம் ஆண்டு CIMA Spell Master போட்டியில் எமது கல்லூரி மாணவி செல்வி. ஆதித்தியா நேசராஜா தேசிய மட்டத்தில் அரையிறுதி வரை வெற்றி பெற்று புகழ் சேர்த்தார்.

மொறட்டுவ பல்கலைக் கழக தகவல் தொழினுட்ப பீடம் தனது 10ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு இவ்வாண்டு (2011) நடத்திய கட்டுரைப் போட்டிகளில் எமது கல்லூரி மாணவன் செல்வன் வைத்தியசூரர் கோகுலரதன் முதலாமிடத்தினைப் பெற்றுள்ளார்.

செல்வி. சாமந்தி நித்தியானந்தன் குண்டுபோடுதல் விளையாட்டு நிகழ்ச்சியில் மாகாணமட்டத்தில் 2008, 2009, 2010, 2011 ஆகிய தொடர்வருடங்களில் முறையே இரண்டாம், முதலாம், இரண்டாம், இரண்டாம் எனும் இடங்களைப் பெற்று தேசியமட்டப்போட்டிகளுக்கு தெரிவாகி சாதனை படைத்துள்ளார்.

பாடசாலைகளில் இன்று மிக முக்கியத்துவம் பெறும் சுற்றுச்சூழல் தொடர்பான மதிப்பீட்டில் எமது பாடசாலை மாகாணமட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டதுடன் 2011 ஏப்ரல் 4ம் திகதி தொடக்கம் 11ம் திகதி வரை இலங்கையில் நடைபெற்ற தென்னாசிய வலயத்தின் சுகாதார வசதிகள் தொடர்பான மாநாட்டில் எமது மாணவிகள் செல்வி. ஆரணி மகாகணபதி, செல்வி. விதுர்சா லிங்கரட்ணம் ஆகியோரோடு எமது ஆசிரியை செல்வி. தயா கந்தசாமி அவர்களும், பலநாட்டுப்பிரதிநிதிகள் கலந்துகொண்ட கருத்தரங்குகளிலும் கண்காட்சிகளிலும் பங்கேற்றுப் பாராட்டுக்களைப் பெற்று கல்லூரிக்குப் பெருமை சேர்த்தனர்.

இலங்கையில் ஒரு கல்வி வலயத்திற்கு ஒரு பாடசாலை என்னும் தெரிவு அடிப்படையில் இலங்கை யுனெஸ்கோ தேசிய ஆணைக்குழு 2009ல் வடமராட்சி வலயத்திலிருந்து எமது பாடசாலையைத் தெரிவு செய்தது. எமது கல்லூரி அதிலிருந்து யுனெஸ்கோ பாடசாலைக் கழகத்தை அமைத்து யுனெஸ்கோ இணைந்த பாடசாலைச் செயற்திட்டத்தை செயற்படுத்தி வருகின்றது. எமது கல்லூரியில் இயங்கிவரும் ஆண் சாரணர்கள் அமைப்பும் 2008ம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்ட பெண்சாரணிய அமைப்பும் சிறப்பாக இயங்கிவருகின்றது. எமது சாரணமாணவர்கள் செல்வன். ஆ. பிரகாஸ், செல்வன். பா. அகிலன் ஆகிய இருவரும் 2010 இல் ஜனாதிபதி சாரணர் விருது பெற்று சாதனைபடைத்தார்கள். இவ்வருடம் (2011) "வளர்ந்துவரும் சாரணசமூகம்" எனும் கருப்பொருளில் அகில இலங்கை ரீதியில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டில் எமது பாடசாலை தேசிய மட்டத்தில் முதலாமிடம் பெற்றதுடன் கௌரவ கல்வியமைச்சர் பந்துல குணவர்த்தன அவர்களிடமிருந்து எமது மாணவர்கள் விருதுகளையும் சான்றிதழ்களையும் பெற்று கல்லூரிக்கு பெருமை சேர்த்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## J/Nelliady Madhya Maha Vidyalayam.

### Student Details As at 2011.07.07

| Grade | | Tamil Medium | | | English Medium | | | Total | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | Boys | Girls | Total | Boys | Girls | Total | Boys | Girls | Total |
| 6A | | 10 | 16 | 26 | 6 | 4 | 10 | 16 | 20 | 36 |
| 6B | | 23 | 9 | 32 | | | | 23 | 9 | 32 |
| 6C | | 24 | 8 | 32 | | | | 24 | 8 | 32 |
| 6D | | 34 | | 34 | | | | 34 | 0 | 34 |
| 7A | | 13 | 8 | 21 | 2 | 5 | 7 | 15 | 13 | 28 |
| 7B | | 18 | 9 | 27 | | | | 18 | 9 | 27 |
| 7C | | 25 | 8 | 33 | | | | 25 | 8 | 33 |
| 7D | | 28 | 5 | 33 | | | | 28 | 5 | 33 |
| 8A | | 11 | 14 | 25 | 1 | 3 | 4 | 12 | 17 | 29 |
| 8B | | 21 | 7 | 28 | | | | 21 | 7 | 28 |
| 8C | | 18 | 8 | 26 | | | | 18 | 8 | 26 |
| 8D | | 18 | 4 | 22 | | | | 18 | 4 | 22 |
| 9A | | 13 | 11 | 24 | 3 | 9 | 12 | 16 | 20 | 36 |
| 9B | | 15 | 18 | 33 | | | | 15 | 18 | 33 |
| 9C | | 30 | 4 | 34 | | | | 30 | 4 | 34 |
| 9D | | 21 | 6 | 27 | | | | 21 | 6 | 27 |
| 10A | | 19 | 9 | 28 | 2 | 5 | 7 | 21 | 14 | 35 |
| 10B | | 24 | 11 | 35 | | | | 24 | 11 | 35 |
| 10C | | 23 | 9 | 32 | | | | 23 | 9 | 32 |
| 10D | | 28 | | 28 | | | | 28 | 0 | 28 |
| 11A | | 14 | 9 | 23 | 5 | 8 | 13 | 19 | 17 | 36 |
| 11B | | 23 | 10 | 33 | | | | 23 | 10 | 33 |
| 11C | | 30 | 4 | 34 | | | | 30 | 4 | 34 |
| 11D | | 26 | 5 | 31 | | | | 26 | 5 | 31 |
| 11R | | 31 | 6 | 37 | | | | 31 | 6 | 37 |
| 2013 | 12A1 | 26 | 13 | 39 | | | | 26 | 13 | 39 |
| | 12A2 | 18 | 6 | 24 | | | | 18 | 6 | 24 |
| | 12C1 | 15 | 7 | 22 | | | | 15 | 7 | 22 |
| | 12C2 | 14 | 7 | 21 | | | | 14 | 7 | 21 |
| | 12M | 19 | 6 | 25 | | | | 19 | 6 | 25 |
| | 12Sci | 7 | 9 | 16 | | | | 7 | 9 | 16 |
| 2012 | 13A1 | 19 | 8 | 27 | | | | 19 | 8 | 27 |
| | 13A2 | 23 | 9 | 32 | | | | 23 | 9 | 32 |
| | 13C | 16 | 4 | 20 | | | | 16 | 4 | 20 |
| | 13M | 24 | 5 | 29 | 2 | 2 | 4 | 26 | 7 | 33 |
| | 13Sci | 3 | 5 | 8 | | 2 | 2 | 3 | 7 | 10 |
| 2011 | 13A1 | 17 | 11 | 28 | | | | 17 | 11 | 28 |
| | 13A2 | 20 | 1 | 21 | | | | 20 | 1 | 21 |
| | 13C | 22 | 6 | 28 | | | | 22 | 6 | 28 |
| | 13M | 11 | | 11 | | | | 11 | 0 | 11 |
| | 13Sci | 2 | 5 | 7 | | | | 2 | 5 | 7 |
| | Total | 796 | 300 | 1096 | 21 | 38 | 59 | 817 | 338 | 1155 |

### No of Students by Grades' Span

| Grade | Tamil Medium | | | English Medium | | | Total | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | Boys | Girls | Total | Boys | Girls | Total | Boys | Girls | Total |
| Gr 6-9 | 322 | 135 | 457 | 12 | 21 | 33 | 334 | 156 | 490 |
| Gr 10-11 | 218 | 63 | 281 | 7 | 13 | 20 | 225 | 76 | 301 |
| Gr 12-13 | 256 | 102 | 358 | 2 | 4 | 6 | 258 | 106 | 364 |
| Total | 796 | 300 | 1096 | 21 | 38 | 59 | 817 | 338 | 1155 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A Professional Qualification Details (Permanent + Maru.Edu.Div. + Temp.Released) as on 07.02.2011

## 1. Professional Details of Teachers

| Category | Gender | Phd.in.Edu. | M.Phil.in.Edu. | M.Ed | Graduates - Who have post Graduate Dip.in.Edu. | Graduates - Who have not Post Graduate Dip.in.Edu | Trained Graduates - Who have not Post Graduate Dip.in.Edu. | Trained Graduates - Who have Post Graduate Dip.in.Edu. | Trained - Training College | Trained - College of Education | Untrained - Physical Education Diploma | Untrained - Fisherish Education Diploma | Untrained other | Total |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Permanent | Male | – | 01 | 02 | 05 | 05 | – | 02 | 02 | 04 | – | – | 01 | 22 |
| | Female | – | 01 | 02 | 10 | 07 | – | 03 | 05 | 01 | – | – | – | 29 |
| | Total | – | 02 | 04 | 15 | 12 | – | 05 | 07 | 05 | – | – | 01 | 51 |

| | | SLTS I | SLTS 2-I | SLTS -2-II | SLTS-3-I | SLTS-3- II | SLTS - Non Grade | SLPS-I | SLPS - 2-I | SLPS-2-II | SLPS - III | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Permanent | Male | 04 | 01 | 05 | 09 | – | 01 | 01 | – | 01 | – | – | – | 22 |
| | Female | 07 | 04 | 09 | 09 | – | – | – | – | – | – | – | – | 29 |
| | Total | 11 | 05 | 14 | 18 | – | 01 | 01 | – | 01 | – | – | – | 51 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## க.பொ.த(சா/த) - 2009

### பாடரீதியான பெறுபேற்றுவீதம் -2009

| பாடம் | தோற்றியோர் | சித்தியடைந்தோர் | சித்திவீதம் |
|---|---|---|---|
| **தமிழ்மொழிமூலம்** | | | |
| இந்துசமயம் | 102 | 101 | 99.02% |
| கத்தோலிக்கம் | 01 | 01 | 100.00% |
| தமிழ் | 103 | 89 | 86.41% |
| ஆங்கிலம் | 103 | 41 | 39.81% |
| விஞ்ஞானம் | 89 | 54 | 60.67% |
| கணிதம் | 89 | 61 | 68.54% |
| வரலாறு | 89 | 52 | 58.43% |
| குடியுரிமைக்கல்வி | 31 | 25 | 80.65% |
| முயற்சியாண்மை | 25 | 20 | 80.00% |
| சங்கீதம் | 14 | 11 | 78.57% |
| சித்திரம் | 05 | 05 | 100.00% |
| நடனம் | 01 | 01 | 100.00% |
| தமிழ் இலக்கியம் | 70 | 55 | 78.57% |
| ஆங்கிலஇலக்கியம் | 13 | 11 | 84.62% |
| வணிகக்கல்வி | 39 | 27 | 69.23% |
| புவியியல் | 07 | 07 | 100.00% |
| த.தொ. தொழில்நுட்பம் | 18 | 12 | 66.67% |
| விவசாயம் | 19 | 10 | 52.63% |
| சுகாதரம் | 30 | 30 | 100.00% |
| ஆக்கத்திறன் தொழில் நுட்பம் | 19 | 19 | 100.00% |
| மனைப்பொருளியல் | 03 | 03 | 100.00% |
| | | | |
| **ஆங்கிலமொழிமூலம்** | | | |
| விஞ்ஞானம் | 14 | 13 | 92.86% |
| கணிதம் | 14 | 14 | 100.00% |
| வரலாறு | 14 | 13 | 92.86% |
| த.தொ. தொழில்நுட்பம் | 14 | 14 | 100.00% |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறந்த பெறுபேறுகள்

க.பொ.த(சா.த) – 2009

| தமிழ் மொழிமூலம் | | | | | |
|---|---|---|---|---|---|
| | மாணவர் பெயர் | பெறுபேறுகள் | | | |
| | | A | B | C | S |
| 01 | செல்வி விஸ்வலிங்கம் பிரியா | 07 | 02 | | |
| 02 | செல்வன் முருகானந்தம் அபிராம் | 06 | 02 | 01 | |
| 03 | செல்வன் கனகரட்ணம் நிரோசன் | 06 | 02 | | 01 |
| 03 | செல்வன் சிவநாதன் அருண்குமார் | 05 | 03 | 01 | |

| ஆங்கிலமொழிமூலம் | | | | | |
|---|---|---|---|---|---|
| | மாணவர் பெயர் | பெறுபேறுகள் | | | |
| | | A | B | C | S |
| 01 | செல்வன் சிவயோகநாதன் துவாரகன் | 05 | 04 | | |
| 02 | செல்வி கஜேந்திரன் வானுஜா | 05 | 02 | 02 | |
| 03 | செல்வன் பரமநாதன் ஹரிரிதர்ஷன் | 05 | 02 | 01 | 01 |

### க.பொ.த(சா/த) - 2010

### பாடரீதியான பெறுபேற்றுவீதம் -2010

| பாடம் | தோற்றியோர் | சித்தியடைந்தோர் | சித்திவீதம் |
|---|---|---|---|
| **தமிழ்மொழிமூலம்** | | | |
| இந்துசமயம் | 107 | 103 | 96.26% |
| கிறிஸ்தவம் | 01 | 01 | 100.00% |
| கத்தோலிக்கம் | 02 | 02 | 100.00% |
| தமிழ் | 110 | 95 | 86.36% |
| ஆங்கிலம் | 110 | 38 | 34.55% |
| விஞ்ஞானம் | 103 | 74 | 71.84% |
| கணிதம் | 103 | 77 | 74.76% |
| வரலாறு | 110 | 77 | 70.00% |
| குடியுரிமைக்கல்வி | 19 | 18 | 94.74% |
| முயற்சியாண்மை | 22 | 13 | 59.09% |
| சங்கீதம் | 12 | 09 | 75.00% |
| சித்திரம் | 14 | 14 | 100.00% |
| நடனம் | 03 | 03 | 100.00% |
| தமிழ் இலக்கியம் | 69 | 49 | 71.01% |
| ஆங்கிலஇலக்கியம் | 07 | 06 | 85.71% |
| த.தொ. தொழில்நுட்பம் | 30 | 27 | 90.00% |
| புவியியல் | 23 | 21 | 91.30% |
| வணிகக்கல்வி | 46 | 37 | 80.43% |
| விவசாயம் | 21 | 19 | 90.48% |
| சுகாதாரம் | 43 | 37 | 86.05% |
| ஆக்கத்திறன் தொழில் நுட்பம் | 09 | 09 | 100.00% |
| மனைப்பொருளியல் | 03 | 01 | 33.33% |

| | | | |
|---|---|---|---|
| **ஆங்கிலமொழிமூலம்** | | | |
| விஞ்ஞானம் | 07 | 06 | 85.71% |
| கணிதம் | 07 | 07 | 100.00% |
| த.தொ. தொழில்நுட்பம் | 04 | 04 | 100.00% |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சிறந்த பெறுபேறுகள்
### க.பொ.த(சா.த) – 2010

தமிழ் மொழிமூலம்

| | மாணவர் பெயர் | பெறுபேறுகள் A | B | C | S |
|---|---|---|---|---|---|
| 01 | செல்வன் கிருஸ்ணயோகன் பிரணவன் | 09 | | | |
| 02 | செல்வி ஷாகிர்த்தியா ஸ்ரீஸ்குமார் | 08 | 01 | | |
| 03 | செல்வி பிரவீனா ஞானசம்பந்தன் | 08 | 01 | | |
| 03 | செல்வி மயூரா செல்வராசா | 07 | 01 | 01 | |
| | செல்வன் சிவானந்தன் சுகந்தன் | 07 | 01 | | 01 |
| | செல்வன் யோகலிங்கம் ஜிவாகன் | 06 | 02 | 01 | |
| | செல்வன் சண்முகராஜா சுஜீவன் | 06 | 03 | | |

ஆங்கிலமொழிமூலம்

| | மாணவர் பெயர் | பெறுபேறுகள் A | B | C | S |
|---|---|---|---|---|---|
| 01 | செல்வி சஞ்சிகா செல்வராசா | 08 | | 01 | |
| 02 | செல்வன் கனகலிங்கம் பிருந்தாபன் | 08 | | 01 | |
| 03 | செல்வன் விக்னேஸ்வரமூர்த்தி முகந்தன் | 06 | 02 | 01 | |

### க.பொ.த.(உ/த) பரீட்சைப் பெறுபேற்று பகுப்பாய்வு 2009

| பாடம் | தோற்றியோர் | சித்தியடைந்தோர் | சித்திவீதம் |
|---|---|---|---|
| **விஞ்ஞானப் பிரிவு** | | | |
| பௌதிகவியல் | 20 | 19 | 95.00% |
| இரசாயனவியல் | 20 | 15 | 75.00% |
| உயிரியல் | 07 | 07 | 100.00% |
| இணைந்தகணிதம் | 13 | 12 | 92.31% |
| பொது ஆங்கிலம் | 27 | 05 | 18.52% |
| பொது அறிவு | 27 | 27 | 100.00% |
| **வர்த்தகப்பிரிவு** | | | |
| கணக்கியல் | 04 | 03 | 75.00% |
| வணிகக்கல்வி | 04 | 02 | 50.00% |
| பொருளியல் | 04 | 02 | 50.00% |
| பொது ஆங்கிலம் | 04 | | 0.00% |
| பொது அறிவு | 04 | 04 | 100.00% |
| **கலைப்பிரிவு** | | | |
| புவியியல் | 16 | 15 | 93.75% |
| தமிழ் | 60 | 49 | 81.67% |
| பொருளியல் | 06 | 04 | 66.67% |
| அளவையியல் | 50 | 40 | 80.00% |
| இந்து நாகரீகம் | 28 | 25 | 89.29% |
| வணிகப்புள்ளிவிபரவியல் | 13 | 02 | 15.38% |
| கிறிஸ்தவம் | 03 | 03 | 100.00% |
| சங்கீதம் | 09 | 09 | 100.00% |
| விவசாயம் | 04 | 02 | 50.00% |
| பொது ஆங்கிலம் | 94 | 01 | 1.06% |
| பொது அறிவு | 94 | 93 | 98.94% |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறந்த பெறுபேறுகள்

### க.பொ.த(உ.த) - 2009

| துறை | | மாணவர் பெயர் | பெறுபெறு | Z புள்ளி | நிலை |
|---|---|---|---|---|---|
| கணிதம் | 01 | செல்வி சாந்திக்கா உதயகுமார் | 2A, B | 2.1067 | 44 |
| | 02 | செல்வன் அருணகிரி மனோராஜ் | 2A, B | 2.2749 | 32 |
| | 03 | செல்வன் தவத்துரைராஜா ஜெயகரன் | A, 2B | 2.0603 | 56 |
| | 04 | செல்வி காயத்திரி விநாயகமூர்த்தி | A, 2B | 1.9016 | 70 |
| | 05 | செல்வி சாளினி தெய்வேந்திரநாயகம் | 3B | 1.7694 | 98 |
| | 06 | செல்வன் தர்மகுலசிங்கம் சிவதர்சன் | 3B | 1.6988 | 110 |
| | 07 | செல்வன் விசுவலிங்கம் கார்த்திக் | 2B, C | 1.6592 | 117 |
| | 08 | செல்வன் சிவநாதன் பிரசாத் | 2B, C | 1.5311 | 139 |
| | 09 | செல்வன் சரவணமுத்து கவிதரன் | 2B, C | 1.4866 | 145 |
| | 10 | செல்வி ரஜிதா தபேந்திரன் | B, 2C | 1.4086 | 170 |
| | 11 | செல்வன் யோகராசா அச்சுதன் | B, 2C | 1.1687 | 205 |
| | 12 | செல்வன் நடராஜா ரமணன் | B, 2C | 0.9726 | 239 |
| | 13 | செல்வி சகானா செல்வரட்ணம் | 3C | 1.2653 | 186 |
| | 14 | செல்வி சரண்யா கருணாநிதி | 2C, S | 0.7255 | 302 |
| உயிரியல் | 15 | செல்வன் சிவானந்தன் ரகுவரன் | 2A, B | 2.4702 | 1 |
| | 16 | செல்வி தனந்திகா சிற்றம்பலம் | 2C, S | 0.803 | 263 |
| | 17 | செல்வி பாலசுப்பிரமணியம் நிரோஜினி | 2B, S | 1.3527 | 109 |
| | 18 | செல்வன் சிவம் கார்த்தியாளன் | 2C, S | 0.6422 | 307 |
| கலை | 19 | செல்வி பாலசிங்கம் திரேயா | 3A | 1.5052 | 96 |
| | 20 | செல்வி பத்மஜா திருஞானசுந்தரம் | A, 2B | 1.2629 | 281 |
| | 21 | செல்வி அரிதா அரிபரநிதி | A, 2B | 1.2550 | 294 |
| | 22 | செல்வி நாகபூசணி பாலசிங்கம் | A, B, C | 1.2420 | 315 |
| | 23 | செல்வன் மதியுகநாதன் மனுசங்கர் | B, 2C | 0.5435 | 1563 |

### க.பொ.த.(உ/த) பரீட்சைப் பெறுபேற்று பகுப்பாய்வு 2010

| பாடம் | தோற்றியோர் | சித்தியடைந்தோர் | சித்திவீதம் |
|---|---|---|---|
| விஞ்ஞானப் பிரிவு | | | |
| பௌதிகவியல் | 31 | 21 | 72.41% |
| இரசாயனவியல் | 30 | 20 | 68.97% |
| உயிரியல் | 18 | 12 | 83.33% |
| இணைந்தகணிதம் | 13 | 12 | 76.09% |
| பொது ஆங்கிலம் | 31 | 07 | 20.41% |
| பொது அறிவு | 31 | 31 | 100.00% |
| வர்த்தகப்பிரிவு | | | |
| கணக்கியல் | 13 | 08 | 84.21% |
| வணிகக்கல்வி | 13 | 11 | 84.21% |
| பொருளியல் | 13 | 10 | 84.21% |
| பொது ஆங்கிலம் | 13 | 02 | 16.00% |
| பொது அறிவு | 13 | 13 | 100.00% |
| கலைப்பிரிவு | | | |
| புவியியல் | 24 | 24 | 100.00% |
| தமிழ் | 51 | 47 | 97.83% |
| பொருளியல் | 19 | 28 | 87.50% |
| அளவையியல் | 30 | 28 | 86.42% |
| இந்து நாகரீகம் | 19 | 18 | 97.14% |
| வணிகப்புள்ளிவிபரவியல் | 06 | 13 | 45.45% |
| விவசாயம் | 08 | 03 | 60.00% |
| பொது ஆங்கிலம் | 52 | 01 | 1.08% |
| பொது அறிவு | 52 | 52 | 100.00% |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| சிறந்த பெறுபேறுகள் | | | | | |
|---|---|---|---|---|---|
| க.பொ.த(உ.த) - 2010 | | | | | |
| துறை | மாணவர் பெயர் | | பெறுபெறுகள் | Z புள்ளி | நிலை |
| கணிதம் | 01 | செல்வி சிந்துஜா சிவஞானசுந்தரம் | A, 2B | 1.7907 | 74 |
| | 02 | செல்வி அருளினி செல்வரட்ணம் | A, B, C | 1.6298 | 93 |
| | 03 | செல்வி ஆரணியா தனபாலசிங்கம் | A, B, C | 1.5811 | 103 |
| | 04 | செல்வன் பஞ்சலிங்கம் பிரசாத் | A,2C | 1.3955 | 137 |
| | 05 | செல்வன் மேரிஜோசப்தாசன் றோஜர் றூவின்ஸ் | 2B, C | 1.4714 | 123 |
| | 06 | செல்வி நிரோஜா கணேசமூர்த்தி | C, 2S | 0.3938 | 393 |
| உயிரியல் | 07 | செல்வன் விக்னராஜா அரவிந்தன் | A, 2B | 1.9709 | 33 |
| | 08 | செல்வன் உருத்திரசிவகணேசமூர்த்தி பிரணவதர்சன் | A, 2C | 1.4055 | 121 |
| | 09 | செல்வி அபர்ணா கிருஸ்ணானந்த செல்வம் | A, B, C | 1.3875 | 128 |
| வர்த்தகம் | 10 | செல்வி சுகன்யா கணேசமூர்ததி | B, 2C | 1.0923 | 195 |
| | 11 | செல்வன் அம்பிகாநிதி கோகுலன் | 3A | 1.9589 | 6 |
| | 12 | செல்வி பவிதா சிவகணேசமூர்த்தி | 3A | 1.8441 | 12 |
| | 13 | செல்வி ஜெகநீதன் சந்துஜன் | 2A, C | 1.2848 | 78 |
| கலை | 14 | செல்வி சாரங்கவாணி சூசைதாசன் | 2A, B | 1.8678 | 21 |
| | 15 | செல்வன் சிவராஜசிங்கம் சிவசங்கர் | A,B,C | 1.5239 | 114 |
| | 16 | செல்வன் தெய்வேந்திரம் முகந்தன் | 2A, B | 1.3906 | 196 |
| | 17 | செல்வன் தர்மராஜா கபிலன் | A,2B | 1.4463 | 162 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணைப்பாடவிதானச் செயற்பாடுகள்

விளையாட்டு முதன்மைச் செயற்பாடுகள் - 2009இ2010

பெருவிளையாட்டுக்கள்

| விளையாட்டுக்கள் | வயதுப்பிரிவு | 2009 | | | | 2010 | |
|---|---|---|---|---|---|---|---|
| | | வலயம் | மாவட்டம் | மாகாணம் | தேசியம் | வலயம் | மாவட்டம் |
| உதை பந்தாட்டம் | 17 வயது ஆண் | 1ம் இடம் | 1ம் இடம் | 2ம் இடம் | பங்குபற்றியமை | - | |
| | 19 வயது ஆண் | 2ம் இடம் | பங்குபற்றியமை | - | - | 3ம் இடம் | பங்குபற்றியமை |
| | 19 வயது பெண் | - | - | - | - | 3ம் இடம் | பங்குபற்றியமை |
| மேசைப் பந்தாட்டம் | 19 வயது ஆண் | 1ம் இடம் | பங்கு பற்றியமை | - | - | 1ம் இடம் | பங்குபற்றியமை |
